1982 மார்ச் 24]

(ஆ) வடாற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு கரும்புக்குப் பணம் கொடுக்காதது.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கரும்பு கொடுத்த விவசாயிகளுக்குப் பணம் தராமல் இருப்பதால் அவர்களிடையே நிலவும் கவலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

வட ஆற்காடு மாவட்டத்தில் தற்போது கீழ்க்கண்ட மூன்று சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன :—

(அ) திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ;

(ஆ) வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ; மற்றும்

(இ) ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

2. இவ்வாலைகள் 1981—82ஆம் ஆண்டுக்கான அரைவைப் பருவத்தில் தீவிரமாக கரும்பு கொள்முதல் செய்து சர்க்கரை உற்பத்தி செய்து வருகின்றன. இக்கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு வங்கிகளிலிருந்து கடன் வசதி பெறுகின்றன.

3. சமீபத்தில் ரிசர்வ் வங்கி கடனுதவி நிறுவனங்கள் கடன் வழங்குவதில் கட்டுப்பாடுகளை (Credit Squeeze Policy) தீவிரமாக செயல்படுத்தியதன் விளைவாக, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி மறுநிதியில் கட்டுப்பாடுகள் விதித்தமையால், கூட்டுறவு வங்கிகள் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு வழங்க ஒப்புதல் அளித்துள்ள உச்ச நிலை நிதி உதவியின் அளவுக்கு நிதி வழங்காமல் குறைந்த அளவு கடன் வழங்கிய நிலையிலேயே மேலும் கடன் வழங்குவதை நிறுத்தி விட்டன. வெளிச்சந்தையில், சர்க்கரையின் விலை குறைந்துள்ளது. எனவே, கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கரும்பு விநியோகிக்கும் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் பணம் கொடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஆலைகளின் பணத்தேவை மிக அதிகம் உள்ளது. சர்க்கரை

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆலைகள் கரும்பு விநியோகிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு விட வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு உரிய காலத்தில் பணம் பட்டுவாடா செய்வதற்காக இச் சர்க்கரைப் பருவத்திற்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை முன்பணம் வழங்குமாறு சர்க்கரைத் துறை இயக்குநர் சிபாரிசு செய்துள்ளார்.

4. கரும்புக்கு உரிய காலத்தில் பணம் பட்டுவாடா செய்வதற்கும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் சிரமத்தை ஓரளவு குறைப்பதற்கும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் நிதிநிலை, அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் முதலியவைகளைக் கருத்திற் கொண்டு மார்ச் மாதத்தில் கரும்பு விளைவிப்பாளர்களுக்கு கரும்புக்கு விலை கொடுப்பதற்கு கீழ்க்கண்டவாறு வழிவகை முன்பணம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

	(ரூபாய் இலட்சத்தில்.)
திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ..	50·00
வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை	55·00
ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை	30·00
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை ..	90·00
கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை ..	25·00
மொத்தம் ..	250·00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இதனால் கரும்புக்கு உரிய காலத்தில் பணம் பட்டுவாடா செய்வதற்கு ஏற்பாடாகியுள்ளது.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் பார்த்தேன். அதிலே இருக்கிற விவரம் ஒரு வருஷம் பாடுபட்டு பயிரிட்ட ஒரு விவசாயி குறைந்த விலையிலே சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஓட்டுகிறான். அப்படி ஓட்டிவிட்ட கரும்புக்குப் பணம் கொடுங்கள் என்று கேட்கிறபோது, சர்க்கார் சொல்கிறது, உனக்குப் பணம் கொடுக்க முடியாது, ஏன் என்று சொன்னால் ரிசர்வ் பேங்க் ஒரு கண்டிஷன் போட்டிருக்கிறது, அதனால் தமிழக கூட்டுறவு வங்கியும் ஒரு கண்டிஷன் போட்டு கட்டுப்படுத்திவிட்ட காரணத்தினால், உனக்கு காலணா

கொடுக்க முடியாது. குறைந்த விலைக்கு கரும்பை ஒட்டிய விவசாயி கையைப் பிசைந்து நிற்கிறான். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், கரும்பு ஒட்டிய விவசாயி களுக்கு பணம் கொடுக்கவில்லை என்றால், அப்படி அவன் பணம் வேண்டுமென்று கேட்டால், அவனிடத்திலே ஜப்திக்குப் போகிறார்கள். ஏன் என்று கேட்டால், கரும்பு ஆலைகள் கொடுக்கவில்லை. அதனால் மாநில வங்கிக்குக் கொடுக்கவில்லை, அதனால், ரிசர்வ் பேங்க் கொடுக்கவில்லை என்றால் என்ன அர்த்தம். ஆனால் இன்றைக்கு விவசாயிகளிடத்திலே மட்டும் ஜப்திக்கு வருகிறார்கள். (குறுக்கீடு). நான் கரும்பு ஒட்டி இருக்கிறேன். சர்க்கார் ஆலைக்குப் பணம் இதுவரையில் வர வில்லை, பணம் வந்தவுடன் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னாலும், அவர்களிடத்திலே ஜப்தி செய்கிறார்கள். இது நியாயமா? எனவே, கரும்பு (குறுக்கீடு) ஒட்டிய ஆலைகளிலே இருந்து பணம் 2 நாட்களிலே இருந்து வந்த உடனே கொடுத்து விடுகிறேன் என்று சொன்னாலும் அந்த ஜப்தியை நிறுத்தி.... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் அறிக்கையை முழுவதுமாகப் படித்திருந் தால், இவ்வளவு கஷ்டப்பட்டு பேச வேண்டிய அவசியம் இல்லை. ஏன் என்றால் ஏற்கனவே முடிந்து போன பிரச்சினைகளுக்கு இவ்வளவு கஷ்டப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே அரசாங்கம் 2½ கோடி ரூபாய் வேஸ் அண்ட் மீன்ஸ் அட்வான்சாக ஒதுக்கி, கரும்பு கொடுத்த விவசாயிகளுக்கு கொடுக்கச் சொல்லி உத்தரவு இட்டதற்குப் பின்னாலே, ஏன் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே அதற்கான நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள், ஒரு தவறான தகவலைத் தருகிறார்; நான் படித்தேன். படித்ததற்குப் பிறகுதான் சொல்கிறேன். ராத்திரிதான் ஊரிலேயிருந்து வந்தேன். நேற்றைய வரையிலே ஆலைகளுக்கு கரும்பு ஒட்டிய விவசாயிகளுக்கு காலணா கூட தரவில்லை. வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே, ஆனால் கொடுத்தோம் என்று சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றக் கூட்டம் முடிந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் ஊருக்குச் சென்று கேட்கும்போது பணம் கிடைத்து இருக்கும்.

TRUTH ALONE TRIUMPHS